Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 22 (06-01-1993) புதன்கிழமை ஓசை 323


## தமிழீழபொதுக்கல்விதேர்வு 13 பேருக்கு 8 சிறப்புதிறன்

1992 தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வுப்பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இதனடிப்படையில் 13 தேர்வு நாடிகள் எட்டுப் பாடங்களிலும் சிறப்புத்திறன் பெற்றுள்ளார்கள். அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன் செல்வன் குணசேகரம் யூட்ரைறோன் 718 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி சுசிலா கதிர்காமசேகரர் 706 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும், பரியோவான் கல்லூரி மாணவன் செல்வன் ஞானப்பிரகாசம் வசந்தகுமார் 704 புள்ளி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# குடாநாட்டில் நாசகாரர் ஊடுருவல்

# பஜரோ மீது கைக்குண்டு வீச்சு



நேற்று முன்தினம் இரவு கோப்பாயில் பஜரோ வாகனம் மீது வீசப்பட்ட குண்டின் சிதறல்களை படத்தில் காணலாம்.

## கோப்பாயில் சம்பவம்

[நமது நிருபர்]

கோப்பாய் தெற்கில் நேற்றுமுன்தினமிரவு வீதியால் சென்று கொண்டிருந்த பஜரோ வாகனம் ஒன்றின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆயினும் வாகனம் சேதம் எதுவுமின்றித் தப்பியது. இதேவேளை, இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாசகார சக்திகள் குறித்து விழிப்பாக இருக்குமாறு விடுதலைப் புலிகள் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் கோப்பாய் தெற்கு பழம் வீதியில் உள்ள வயல் மதவடி, அல்லது உசிசியில் குளம் மதவடி (வெள்ள வாய்க்கால்) என்னும் இடத்தில் இச் சம்பவம் நடைபெற்றது. மேற்படி சம்பவத்தில் வாகனத்தின் மீது வீசப்பட்ட குண்டு யூக்கோஸ்லோவாகிய தயாரிப்பான எம்-75 புதியரக கைக்குண்டு கிரனைட்-என விடுதலைப் புலிகளால் உறுதி செய்யப்பட்டது. இதற்கான ஆதாரங்கள் வெடித்த குண்டின் எஞ்சிய பகுதியில் இருந்து பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு இக்கைக் குண்டை வீசிய நபர் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் புதிய 'ஏசியா' சைக்கிள் ஒன்றைக் கைவிட்டுச் சென்றுள்ளார். இதேவேளை, இச் செயலுடன் சம்பந்தப் பட்ட நபர் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

மேலும், இத்தீயசக்திகளின் விடயத்தில் பொது மக்கள்மிகவும் அவதானமாக இருக்கும் படியும், உங்கள் பகுதியில் நடமாடும் புதியவர்கள் பற்றி ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பணிகளை கைவிடுதல் மாணவர்களை பாதிக்கும்

### யாழ். பல்கலை ஆசிரியர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''அரசினால் எமக்கு இழைக்கப்படும் பாரிய இடையூறுகளுக்கு முகம்கொடுத்து இன்னல்களுக்கு மத்தியிலும் எம்மால் இயங்கமுடியும்என்பதைஉறுதியாக நிரூபிப்பதே அரசுக்கு நாம்விடுக்கும் சவாலாக இருக்கும்'' இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அருட்திரு. கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அவர்கள் தென்னிலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் போராட்டம் தொடர்பாக விடுத்த செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கையில்,

போர்க்காலச் சூழ்நிலையில் உயிர் ஆபத்துக்கள் மத்தியில் பணியாற்றிவரும் நாம், சம்பள உயர்வை மட்டும் எமது தனிப்பட்ட பிரச்சினையாகக் கருதவில்லை. கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக பல தடைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் எமதுபணியைச் செய்துவருகிறோம். வாழ்க்கைக்கு அடிப்படையாகத் தேவைப்படும் உணவு, மருந்து எரிபொருள், மின்சாரம் ஆகியவை கடந்த இரண்டரை வருடங்களாக எமக்கு மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் காகிதாதிகள், ஆய்வுகூட உபகர

(2-ம் பக்கம் பார்க்க)

## கடற்படைக்குத் தப்பி பூநகரி முகாமில் சிக்கினேன்

### -விடுவிக்கப்பட்டவர் தகவல்

(வடமராட்சி)

''நான் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த பொழுது இடைக்காட்டுப் பகுதியில் பெரும் மோதல்கள் ஏற்பட்டதை சத்தங்கள் மூலம் உணர்ந்துகொண்டேன் அன்று 150க்கு மேற்பட்ட இராணுவத்தினர்களுக்குஅங்குவைத்து அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 48 இராணுவத்தினரின் உடல்களை கண்டேன்''.

இவ்வாறு மூன்று மாதங்களுக்கு மேலாக பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் விடுவிக்கப்பட்ட வல்லிபுரம் முத்துராசா (வயது 48 மயிலிட்டி) என்னும் படகோட்டி தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கும் போது; ''கடந்தஐப்பசிமாதம் 7 ஆம் திகதி ஆலங்கேணியில் இருந்து கிளாலி நோக்கி நெல் மூடைகளை படகில் எடுத்து வந்தேன். இரவு திடீரென எதிர்ப்பட்ட கடற்படையினர்

(3-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு இணைப்பு

## கருத்துக் கணிப்பிற்கு அரசாங்கம் முடிவாம்

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்த தயாராக இருப்பதாக அரசு வட்டாரங்களை மேற்கோள்

கம் வகிக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒரு நியாயமான தீர்வை முன்வைக்கும் என்று அரசு நம்புவதாகவும் ஐலன்ட் தெரிவித்துள்ளது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்

## வெடிச் சத்தம் கேட்ட பின்னர் ஒருவர் ஓடுவதை கண்டேன்

### கைக்குண்டு தாக்குதல் தொடர்பாய் அயலவர் தகவல்

[நமது நிருபர்]

குண்டொன்று பெரும் சத்தத்துடன் வெடித்த சில வினா

திரட்டிய தகவல்களின்படி சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர்

வித்ததாகவும் திருட்டு மற்றும் வாவியல் சேட்டைகளில் ஈடு

## ரஷ்ய ஹெலி கொள்வனவு; அதிகாரிகளிடையில் சர்ச்சை

(கொழும்பு)

எம்-ஐ-8 ஹெலிகொப்டர் கொள்வனவு தொடர்பாகவும் கொழும்பு பாதுகாப்பு அதிகா

யாகப் பெற்றுக்கொள்ளாது கேள்விப்பத்திரங்கள் கோரிபது ஏன் என பாதுகாப்பு



நேற்று முன்தினம் இரவு கோப்பாயில் பஜரோ வாகனம் மீது வீசப்பட்ட குண்டின் சிதறல்களை படத்தில் காணலாம்.

... விடுதலைப் புலிகளால் உறுதி செய்யப்பட்டது. இதற்கான ஆதாரங்கள் வெடித்த குண்டின் எஞ்சிய பகுதியில் இருந்து பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு இக்கைக் குண்டை வீசிய நபர் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் புதிய 'ஏசியா' சைக்கிள் ஒன்றைக் கைவிட்டுச் சென்றுள்ளார். இதேவேளை, இச்செயலுடன் சம்பந்தப் பட்ட நபர் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

மேலும், இந்தியசக்திகளின் விடயத்தில் பொது மக்கள்மிகவும் அவதானமாக இருக்கும் படியும், உங்கள் பகுதியில் நடமாடும் புதியவர்கள் பற்றி ( 4 ஆம் பக்கம் பார்க்க )

வடக்கு - கிழக்கு இணைப்பு

## கருத்துக் கணிப்பிற்கு அரசாங்கம் முடிவாம்

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்த தயாராக இருப்பதாக அரசு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலன்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

மங்கள முனசிங்கா பாராளுமன்ற தெரிவுக் குழு பரிந்துரைத்த வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு இல்லாத இடைக்கால யோசனையை அரசு ஆதரிக்கும் எனவும் அச்செய்தி கூறுகிறது.

அனைத்துக் கட்சிகளும் அங்கம் வகிக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒரு நியாயமான தீர்வை முன்வைக்கும் என்று அரசு நம்புவதாகவும் ஐலன்ட் தெரிவித்துள்ளது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முதற்கட்ட நடவடிக்கையாக ஒரு சமஷ்டி நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருப்பதாக ஒரு சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் கருத்து வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தேர்தலை முன்னிட்டு தாக்குதல் இடம்பெறாது

சிங்கள விமர்சகர் கருத்து

ஜனாதிபதித் தேர்தல் அல்லது எந்தத் தேர்தலாக இருந்தாலும் தேர்தலை முன்னிட்டுப் பாரிய இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறாது என்று அரசியல் அவதானிகளை மேற்கோள் காட்டி ஐலன்ட் அரசியல் விமர்சகர் சுமித்தா எழுதுகிறார்.

அரசு அதன் நயம் கருதியே தணிந்துபோகிறது என்று எழுதும் அவர், கடந்த தேர்தல்களில் தமிழரின் ஆதரவுடன் வெற்றியீட்டியதுபோல் இம்முறையும் தேர்தலில் வெல்லுவதற்கு அரசு தமிழரின் ஆதரவை எதிர்பார்க்கிறது என்கிறார்.

## துப்பாக்கி முனையில் பத்திரிகையாளர் மிரட்டல்

(கொழும்பு)

'கொழும்ப' என்ற பத்திரிகையின் அச்சகத்தார் பயமுறுத்தப்பட்டார். நடுநிசியில் அச்சகத்துள் கைத்துப்பாக்கியுடன் நுழைந்த ஒருவர் துப்பாக்கி முனையில் அச்சகத்தில் வேலை செய்தவர்களைப் பயமுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கி நபருக்கு எதிராக பத்திரிகையில் ஆசிரியர் சித்தா ஜெயசேனா பத்தி ஒன்று எழுதியதற்காகவே அச்சகத்தார் பயமுறுத்தப்பட்டனர். இதனால் அச்சகத்தில் தடங்கல் ஏற்படவே ( 2 ஆம் பக்கம் பார்க்க)

## படை பலத்தை அதிகரிக்க சிறிலங்கா அரசு முடிவு

(கொழும்பு)

இராணுவத்தின் ஆள்அணி பலமும், ஆயுத பலமும் அதிகரிக்கப்படவுள்ளதாக உத்தியோகபூர்வ இராணுவவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனவரி மாத இறுதியில் புதிதாக 3000 பேர் படையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும், மேலும் 3000 பேர் மார்ச் மாத இறுதியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யத் தயாரிப்பான எம். ஐ- 8 ஹெலிகள் இம் மாத முடிவில் வந்து சேரும் எனவும் ( 4 ஆம் பக்கம் பார்க்க )

# வெடிச் சத்தம் கேட்ட பின்னர் ஒருவர் ஓடுவதை கண்டேன்

### கைக்குண்டு தாக்குதல் தொடர்பாய் அயலவர் தகவல்

[நமது நிருபர்]

குண்டொன்று பெரும் சத்தத்துடன் வெடித்த சில வினாடிகளில் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்ட சத்தங்கள் கேட்டது என கோப்பாய் பகுதியில் பஜரோ வாகனம் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து அப்பகுதி வாசி ஒருவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் பற்றி அப்பகுதி மக்களிடமிருந்து நமது நிருபர் திரட்டிய தகவல்களின்படி சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் கடந்த சில நாட்களாக உச்சிவிக்குள வெள்ளவாய்க்கால் பகுதிகளில் சுற்றித்திரிந்ததாகவும் அப்பாதை வழியாக சென்ற வயல், குளப் பகுதிகளை நோட்டமிட்டு திரிந்ததாகவும் நடுத்தர வயதுடைய ஒருவர் தெரிவித்தார்.

மேலும் தான் இவ் இளைஞனின் நடமாட்டம் பற்றி சந்தேகித்ததாகவும் திருட்டு மற்றும் சமூகவிரோதச் சேட்டைகளில் ஈடுபடும் நோக்கில் செயற்படலாம் என கருதியதாகவும் தெரிவித்தார். சம்பவம் நடைபெறுவதற்கு சில வினாடிகளுக்கு முன்னர் மேற்படி நபர் மதகில் கால் ஊன்றியவாறு சைக்கிளின் முன் கான்டியில் முகத்தை பதித்தவாறு நின்றிருந்தார்.

அப்போது அவர் நீலக்காசு ( 2 ஆம் பக்கம் பார்க்க )

பொருளாதார தடையை எதிர்த்து

# மாபெரும் 'கண்டனப்' பேரணி திங்களன்று நடாத்த முடிவு

சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடையைக் கண்டித்து எதிர்வரும் திங்கட்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடாத்த வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

நேற்று மாலை யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே இம்முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இக் கூட்டத்தில் அனைத்து வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

நேற்றைய கூட்டத்தீர்மானத்தின்படி மக்கள், வலிகாமம் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளில் இருந்து எதிர்வரும் திங்கட்கிழமை காலை புறப்பட்டு நல்லூர் முருகன் கோவிலில் கூடுவர். பின்னர் அங்கிருந்து முற்பகல் 10-00 மணியளவில் பதாதைகள் சுலோகங்கள் என்பனவற்றைத் தாங்கிய வண்ணம் மக்களின்வெகுஜனப் போராட்ட ஊர்வலம் ஆரம்பமாகி கோவில் வீதிவழியாக சென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை அடையும். அங்கு சிறிலங்கா ஜனாதிபதிக்கு வழங்கவென எடுத்துச் செல்லப்படும் மகஜரின் பிரதி ஒன்று கையளிக்கப்படும். பின்னர் ஊர்வலம் கோவில்வீதி வழியாக யாழ் ஆஸ்பத்திரிவீதியை அடைந்து அங்கிருந்து கச்சேரியை சென்றடையும். பின்னர் அனைத்து மக்களும் கச்சேரி முன்றலில் போராட்டத்தை நடாத்துவர் அதனைத் தொடர்ந்து சிறிலங்கா ஜனாதிபதிக்கானமகஜர் யாழ். அரசஅதிப ( 2 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை சேர்க்காத பேச்சு வெற்றி தரப்போவதில்லை

### -காமினி நவரட்ண தெரிவிப்பு

[கொழும்பு]

"பாலஸ்தீனியர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதானால் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை சமாதானப் பேச்சுவார்த்தையில் சேர்த்துக் கொள்ளாமல் முடியாது. சக்திவாய்ந்த ஒரு தீவிரவாத இயக்கமாக வளர்ந்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்த்துக்கொள்ளாமல் இனப்பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தைகள் வெற்றி தராது என்று நான் அன்றே தெரிவித்தேன்"

இவ்வாறு முன்னாள் சற்றடே றிவியூவின் ஆசிரியரும் பத்திரிகையாளருமான காமினி நவரெட்னா ஐலன்ட் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்.

"யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான சற்றடே றிவியூவில் (3 ஆம் பக்கம் பார்க்க)

...ருக்கொண்டிருந்த பொழுது இடைக்காட்டுப் பகுதியில் பெரும் மோதல்கள் ஏற்பட்டதை சத்தங்கள் மூலம் உணர்ந்துகொண்டேன் அன்று 150க்கு மேற்பட்ட இராணுவத்தினர்களுக்குஅங்குவைத்து அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 48 இராணுவத்தினரின் உடல்களை கண்டேன்".

இவ்வாறு மூன்று மாதங் ... மூலம் விடுவிக்கப்பட்ட வல்விபுரம் முத்துராசா (வயது 48 மயிலிட்டி) என்னும் படகோட்டி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது; "கடந்தஐப்பசிமாதம் 7 ஆம் திகதி ஆலங்கேணியில் இருந்து இளாலி நோக்கி நெல் மூடைகளை படகில் எடுத்து வந்தேன். இரவு திடீரென எதிர்ப்பட்ட கடற்படையினர் (3-ம் பக்கம் பார்க்க)

## ரஷ்ய ஹெலி கொள்வனவு; அதிகாரிகளிடையில் சர்ச்சை

(கொழும்பு)

எம் -ஐ -8 ஹெலிகொப்டர் கொள்வனவு தொடர்பாகவும் கொழும்பு பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியில் சர்ச்சைகள் எழுந்துள்ளதாக தெரியவருகிறது.

இது குறித்து தெரியவருவதாவது எம்-ஐ-8 ஹெலிகொப்டர்கள்ரஷ்யஅரசிற்கு சொந்தமான எவியா எக்ஸ்போட் நிறுவனத்தால் தயாரிக்கப்படுவதாகும். இதனை சிறிலங்கா அரசு ரஷ்ய அரசிடம் நேரடியாகப் பெற்றுக்கொள்ளாது கேள்விப்பத்திரங்கள் கோரியது ஏன் என பாதுகாப்பு துறையினர் கேள்வியெழுப்புகின்றனர்.

அவ்வாறு நேரடியாகப் பெற்றுக் கொள்ளப்பட்டால் விலை குறைவாகப் பெற்றுக்கொண்டிருக்க முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது குறித்து விசாரிக்க விசாரணைக் கமிசன் நியமிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிவிவகார அமைச்சராக ஹமீத் நியமிக்கப்படலாம்

[கொழும்பு]

நீதி உயர் கல்வி அமைச்சர் ஏ.சி. எஸ். ஹமீது விரைவில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படலாம் என கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

ஜனாதிபதி பிரேமதாசா விரைவில் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யவுள்ளதாகவும், அம்மாற்றங்களின் போதே ஹமீதிற்கு வெளிவிவகார அமைச்சு ஒதுக்கப்படவுள்ளதாகவும் அப் பத்திரிகை தெரிவிக்கின்றது.

மேலும் அப்பத்திரிகை அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களை துரிதப்படுத்துவதற்காக அடுத்த சில தினங்களில் அமைச்சரவையில் புது முகங்கள் தோன்றலாம் எனவும், (3-ம் பக்கம் பார்க்க)

## வட கிழக்கு யுத்தம் வெற்றியளிக்கமாட்டாது

### : சிறிமாவோ பண்டாரநாயக்கா

இன்று வடக்கில் நடைபெறும் யுத்தம் ஒரு போதும் வெற்றியளிக்காது அதில் எமக்கு நம்பிக்கையே இல்லை.

இவ்வாறு பெல்மதுளையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எமது கட்சியில் எவ்வித பிரிவு பேதமும் இல்லை பத்திரிகைகள் வெறும் புரளியை ஏற்படுத்தி வருகின்றன. நான் எவ்வளவோ பிரச்சினைகளுக்கு (2-ம் பக்கம் பார்க்க)

## 'விழித்தெழுவோம்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மகளிர் படையணி உருவாக்கிய "விழித்தெழுவோம்" பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று மாலை 4.00க்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி (3-ம் பக்கம் பார்க்க)

## மேலும் 2 சடலங்கள் கரையொதுங்கின

இளாலி கடற்பரப்பில் கடந்த சனியன்று இரவு கடற்படையினரின் தாக்குதலுக்கு பலியான மேலும் இருவரின் சடலங்கள் கரையொதுங்கியதாக தெரியவருகிறது.

(2-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## சித்திரம் வினா-விடை

ஆண்டு 10, 11இல் சித்திரம் கற்போருக்கும், வட-இலங்கை நுண்கலை மன்றப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் உதவும் சித்திரம் வினா—விடை விற்பனையாகிறது. ஆக்கம்: த. சிவயோகலிங்கம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3918)

## உடன் தேவை

பாடுநிலா இசைக்குழுவிற்கு ஓர்கன் வாசிப்பதில் நல்ல தேர்ச்சியுள்ளவர் உடன் தேவை தொடர்பு: 'பாடுநிலா' 17, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (3922)

## விற்பனையாகிறது

இலகு ஆங்கிலம் (English Made Easy) ஆண்டு 4, 5, 6 ரூபா 19-50 மாற்றம் மக்கள் சஞ்சிகை ரூபா 10-00. தமிழ்த் தென்றல் — யாதுமூரானின் கவிதைகள் ரூபா 20-00 பிரபல்புத்தகசாலைகளில் கிடைக்கும். (3919)

## வெளிவந்துவிட்டது

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு உதவும் தமிழ் ஆண்டு 5 செயல் நூல் வெளிவந்து விட்டது. விரிவான விளக்கங்கள், பயிற்சிகள் கொண்டது. ஆக்கம் த. துரைசிங்கம், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3917)

## கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5679)

## பெற்றுக்கொள்ளவும்

01-01-1993 அன்று சிறுப்பிட்டி-பருத்தித்துறை வீதியில் ஒருதொகைப்பணம் சேர்சுடன் ஆறுமுகம் சச்சிதானந்தம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு சித்திரவேல் கடை, சிறுப்பிட்டி என்ற முகவரியில் ஒப்படைக்கப்பட்டது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெறவும். (3933)

## மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல தினிசுகளில்விற்பனைக்குண்டு. வர்ணக் கலர்களில் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். படங்கள் தனியாகவும், சிலிப் தனியாகவும் ஸ்ரீ காந்தா அச்சகம்—புத்தகசாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3921)

மாபெரும்

ரிடம்சமர்ப்பிக்கப்பட உள்ளது.

அனைத்து தமிழீழ மக்களும் இவ் ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (பா)

துப்பாக்கி

கொழும்பு நகரின் ஐந்து மையங்களில் இந்தப் பத்திரிகைகள் கல்லச்சில் பொறிக்கப்பட்டு வெளியாகின.

இச்சம்பவம் தொடர்பாக ஆசிரியர் சிந்தா ஜெயசேனா நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில், பத்திரிகையாளர் குடியிருக்கப் 15 குழி காணிக்குப் பதிலாக ஒரு கைத்துப்பாக்கி தரும்படி அரசைக் கேட்டுக் கொண்டார்.

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ.)

## முக்கிய அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும்,
நுகர்வோர்களுக்கும்.

### பங்குப் பணம் ரூபா 100/-

1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டத்திற்கமைய உபவிதி 18 (1)- ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும்.

பங்குப் பணப் பெறுமதியை ரூபா 100/- ஆக அதிகரிக்காத தற்போதைய அங்கத்தவர்கள் 05 - 03 - 1993 இற்குப் பின்னர் அங்கத்துவ உரிமையை இழந்து சங்கத்தில் கிளைக்குழு உறுப்பினராகவோ, பொதுச்சபை உறுப்பினராகவோ, பணிப்பாளர் சபை உறுப்பினராகவோ பதவி வகிக்க முடியாததுடன், வாக்களிக்கும் உரிமையினையும் இழந்து விடுவர். 05 - 03 - 93 இற்குப் பின்னர் பங்கு நிலுவையைச் செலுத்தினாலும், செலுத்திய திகதியிலிருந்து ஒரு வருடம் அங்கத்துவ உரிமையை அனுபவிக்கக் காத்திருக்க வேண்டும்.

எனவே காலதாமதமின்றி தற்போது அங்கத்தவர்களாக இருப்பவர்கள் தமது பங்குப்பணத்தை ரூபா 100/ஆக அதிகரிப்பதற்கு 05-03-1993ற்கு முன்னர் தங்கள் தங்கள் கிளைகளில் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் பூரணப்படுத்துவதுடன் சங்க வளர்ச்சிக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம் மேலதிக விபரங்களுக்குச் சங்கத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வை. செந்திநாதன்
தலைவர்

பொ. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்

(சி-5709)

புலிகளை

நான் ஆசிரியராக இருந்தசமயம், 1984 செப்ரெம்பரில்புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்கும்படிஎழுதினேன். வடக்கில் வளர்ந்து வந்த பிரச்சினையை நன்றாக மதிப்பீடு செய்தபோது அது கட்டுக்கடங்காமல் போகும் என்ற குணக்குறிகள் தென்பட்டதால் நான் அவ்வாறு எழுத நேர்ந்தது.

"முழுப் பிழையையும் விடுதலைப் புலிகளில் இப்போது சுமத்துவதுவதில் நியாயமில்லை. நாம் எல்லோரும் கண்டிக்கப்படவேண்டியவர்கள். எமது தலைவர்கள் இராணுவ அணுகுமுறையைக் கைவிட்டால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இப்பொழுதும் சாத்தியமானது என்று கூறுகிறேன்.

"இராணுவம், அதன் நீண்டகாலத் திட்டத்தின்படி தமிழ் மண்ணின் இதயமான யாழ்ப்பாணத்தின் மீது இறுதித் தாக்குதலை விரைவில் மேற்கொள்ளப் போவதாக டிசம்பர் 31 ஐலன்ட் பத்திரிகையில் வெளியான செய்தியை நான் மிகவும் அச்சத்துடன் பார்வையிட்டேன்.

"யாழ்ப்பாணத்தின் மீது படையெடுப்பு நடைபெற்றால் இரு இனங்களுக்குமிடையில் பொறுப்பு வாய்ந்தவர்கள் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் இல்லாமல் போய்விடும்.

"ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்கும் சிங்களத் தலைவர்கள், தங்கள் நேரிய பார்வையைக் கைவிட்டு பிரச்சினையை எதார்த்தமாக அணுகினால் ஒரு சமாதானத் தீர்வுஇன்னும் சாத்தியமாகும்

"இப்படிச் செய்வது புலிகளுக்கு விட்டுக் கொடுப்பது என்று அர்த்தமல்ல. இது பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுப்பதாகும். இதை விட வேறு வழியொன்றும் இல்லை" என எழுதியுள்ளார்.

மேலும்

இதேவேளை நேற்றிரவு அடையாளம் காணப்படாத இச் சடலங்களில் ஒன்று தமிழீழ காவல்துறையினரால் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பணிகளை

ணங்கள், இரசாயனங்கள் என்பன கிடைக்காததனால் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் எமது பணிகளைக் கைவிடுதல் எமது மாணவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறான எமது இன்னல்களைப் பலதடவை கடித மூலமும், நேரடியாகவும் இலங்கைப் பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனத்துக்குச் சுட்டிக்காட்டியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை நாம் வேதனையுடன் நினைவுபடுத்துகின்றோம்.

எனினும் இலங்கைப் பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குகிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வெடிச்

சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார். இதைப ஜரோ வாகனம் வந்த வெளிச்சத்தில் கண்டேன். நான் வீட்டு வாசல் கதவை பூட்டிவிட்டு திரும்பிய சில வினாடியில் குண்டு ஒன்று பெரும் சத்தத்துடன் வெடித்தது. நான் திடுக்கிட்டு ஊகிப்பதற்குள் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்ந்தன அவ்வேட்டு சத்தங்கள் ஓயும்முன் நபர் ஒருவர் ஒழுங்கையால் வயல் புறம் நோக்கி ஓடியதைக் கண்டேன் என்றார். அப்பகுதியில் வசிக்கும் பெண்மணி ஒருவர் தகவல் தருகையில்; வெடிகேட்டதும் நபர் ஒருவர் எமது முன்பக்க வாசலின் அருகில் வேலியுடன் படுத்திருந்துவிட்டு எழுந்து ஓடியதைக் கண்டேன் என்றார்.

வட-கிழக்கு

முகம் கொடுத்து நாட்டை பாதுகாக்கும் பணியில் முன்நின்று உழைத்து வருகிறேன் இன்றைய கூட்டத்திற்கு இவ்வளவு பெருந்தொகையாக நீங்கள் கலந்து கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

மணிக்கூட்டு கோபுரம் ஏகமும் பரவி வருகிறது எமக்கென மணிக்கூடு ஒன்று அவசியப்படாது போலிருக்கிறது.

இதற்கு செலவிடும் பணத்தை மக்களின் நலனிற்கு பயன்படுத்தினால் இது வரவேற்கக் கூடியது.

மீண்டும் ஜனாதிபதி இந்தியா போகப்போகிறார் சாயி பாபாவைக் காணமாத்திரமல்ல மலையாள மந்திரவாதியைக் காணவும் தான். மக்கள் பொய்ப்பிரசாரங்களை நம்பி ஏமாறக்கூடாது என்றார்.

## மரண அறிவித்தல்

### திருமதி விசாலாட்சி-சேனாதிராஜா

திருமதி விசாலாட்சி - சேனாதிராஜா காலமானார் இவர் காலஞ்சென்ற சேனாதிராஜாவின் அன்பு மனைவியும், தர்மலிங்கம், (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), பரமேஸ்வரி, வசந்தாதேவி, சரஸ்வதி, பராசக்தி(U. K.), தர்மகுலசிங்கம் (Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாவித்திரி, கணபதிப்பிள்ளை, பாலசுப்பிரமணியம் (U. K), பத்மநாதன் (France), கந்தசாமி (U. K), ரஞ்சிதமலர் (Canada) ஆகியோரின் அன்புமாமியாரும், லதா (ஆசிரியை, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி), இராஜமோகன் (U. K), சிவமோகன் (Denmark), விஜியலதா (U. K), ஜெயமோகன் (U. K), பிரியதர்சினி, வித்தியதர்சினி சுபாங்கி (U. K.), சுபாணி (Canada), சுபாகரன் (U. K), சுபத்திரா, சுதர்சினி தாரணி சுதாகரன், காலஞ்சென்ற சாள்ஸ் செந்தூர் (U. K) சேரா (U. K), மைக்கல் (U. K) தனுஷா [Canada] ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், பிரவீணா, ரதிஷா, திரிஷான் [U. K] ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களாகிய இராசம்மா, மணியம், துரையப்பா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி ப. சரஸ்வதி
[மகள்]

G. P. S Road,
கல்வியங்காடு.
[3937]

## நினைவு கூருகின்றோம்...

### 1993-01-06

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி-திருநகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ஜெயசீலன் [சந்தையா மனோகரன் - சிவநகர், உருத்திரபுரம் - கிளிநொச்சி]

திருகோணமலை பிரட்றிக் கோட்டை முகாமினுள் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு கிளிநொச்சி - பூநகரி, 4-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

அன்னக்களி [குமாரு நகுலேஸ்வரன் -பல்லாய், செம்மண்குன்று, பூநகரி - கிளிநொச்சி]

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய்ப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

ஈசன் [இராசரத்தினம், பாலசேகீஸ்வரன் - 83, நெடுங்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெற்றிடம்

காவற் பொறுப்பாளர் (தாழ்தரம்) பதவி
POST OF CARETAKER (LOWER GRADE)

ரிப்பதற்குப் பயன் படுத்தப்படும் பொருள்களைப் பற்றிய அறிவுடையவராக இருப்பதுடன் குறித்த தொகையான ஆட்களுக்கு ஒவ்வொரு வகையான உணவுகளையும் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களின் அளவு குறித்துப் பரிச்சயமுள்ளவர்.

ஆ) மேற்குறிப்பிட்ட பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர் துணைவேந்தர் விடுதியிலேயே தங்கியிருந்து பணியாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

KALALAYAAH

மகளிருக்கான

டிப்ளோமா

ரம் காட்டிப் பெறவும்.

(3933)

## மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல தினிசுகளில்விற்பனைக்குண்டு. வர்ணக் கலர்களில் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். படங்கள் தனியாகவும், சிலிப் தனியாகவும் ஸ்ரீ காந்தா அச்சகம்—புத்தகசாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(3921)

அனுபவிக்கக் காத்திருக்க வேண்டும்.

எனவே காலதாமதமின்றி தற்போது அங்கத்தவர்களாக இருப்பவர்கள் தமது பங்குப்பணத்தை ரூபா 100/ஆக அதிகரிப்பதற்கு 05-03-1993ற்கு முன்னர் தங்கள் தங்கள் கிளைகளில் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் பூரணப்படுத்துவதுடன் சங்க வளர்ச்சிக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். மேலதிக விபரங்களுக்குச் சங்கத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வை. செந்திநாதன்
தலைவர்

பொ. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்

(சி-5709)

விட வேறு வழியொன்றும் இல்லை'' என எழுதியுள்ளார்.

படுத்திருந்துவிட்டு எழுந்து ஓடியதைக் கண்டேன் என்றார்.


KALALAYAAH
கலாலயா

மகளிருக்கான

# டிப்ளோமா
# மனைப்பொருளியலும் கைத்திறனும்
# பயிற்சி நெறி

- **கேக் ஐசிங்**
- **சமையற் கலை**
  (சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள், உள்ளூர் மூலப் பொருள்களில் உணவுகள் தயாரித்தல்)
- **கூந்தல் அலங்காரம்**
  (கொண்டைகள் போடுதல், விக் தயாரித்தல், மணப்பெண் அலங்காரம் செய்தல்)
- **கைப்பணிகள்**
  (மக்றம், கம்பளி நூல் வேலை, பஞ்சில் பொம்மை செய்தல், வைக்கோல் வேலை, வாழை நார் வேலை, கழிவு துணிகளில் அலங்காரங்கள் செய்தல்)
- **பூ வேலை:**
  (கடதாசியினாலும், துணிகளினாலும் மலர்கள், மலர்ச்செண்டுகள் செய்தல்)
- **தையற் கலை:**
  (குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான ஆடைகள் தயாரித்தல், பூவேலைப்பாடுகள் செய்தல்)

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்
பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 10.01.1993**
காலை 9.00 மணி

**கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம்: 11.01.1993**
காலை 9.00 மணி

# கலாலயா

விக்டோறியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ்ப்பாணம்.

(சி-5708)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெற்றிடம்

காவற் பொறுப்பாளர் (தாழ்தரம்) பதவி
POST OF CARETAKER (LOWER GRADE)

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து காவற் பொறுப்பாளர் (தாழ்தரம்) பதவிக்கான விண்ணப்பங்கள் 1993-01-24 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பளத்திட்டம்:- ரூபா 1775 - 8 X 30 - 2015 மாதமொன்றுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும். (இவைதவிர/வாழ்க்கைச் செலவுபடியும் ஏனையபடிகளும் செலுத்தப்படும்.)

தகைமைகள்: -1) எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் உடையவர் ஆக இருத்தல் வேண்டும்.

11) சமையலிலும் தளபாடங்கள் மட்பாண்டத் தொகுதி, வெட்டுக்கருவிகளின் தொகுதி, துணிகள் என்பவற்றைப் பேணுவதிலும் சூழவுள்ள தோட்டத்தைப் பராமரிப்பதிலும் அறிவுடையவராக இருத்தல் வேண்டும். பொருட் பதிவேட்டைப் பேணக்கூடியவராகஇருத்தல் வேண்டும்.

குறிப்பு:-

அ) மேலே கூறப்பட்டுள்ள தகைமைகளுடன் கீழே தரப்பட்ட தகைமைகளையும் உடையவருக்குமுன்னுரிமை அளிக்கப்படும்.

1) மேலைத்தேய கீழைத்தேய உணவுவகைகளைத் தயாரிப்பதில் அறிவு உள்ளவர்.

11) பல்வேறு வகையான உணவுவகைகளைத் தயாரிப்பதற்குப் பயன் படுத்தப்படும் பொருள்களைப் பற்றிய அறிவுடையவராக இருப்பதுடன் குறித்த தொகையான ஆட்களுக்கு ஒவ்வொரு வகையான உணவுகளையும் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களின் அளவு குறித்துப் பரிச்சயமுள்ளவர்.

ஆ) மேற்குறிப்பிட்ட பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர் துணைவேந்தர் விடுதியிலேயே தங்கியிருந்து பணியாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு:- பொது உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப பதிவாளர்/தாபனக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் இவ் விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் ரூபா20/-க்கான காசுக் கட்டளை/தபாற்கட்டளையுடன் 23X10 ச.மீ அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/தாபனக்கிளையிலிருந்து பெறப்படாத விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1992-12-29.

(சி-5706)

## 1993-01-06

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி - திருநகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ஜெயசீலன்** [சுந்தையா மனோகரன் - சிவநகர், உருத்திரபுரம் - கிளிநொச்சி]

திருகோணமலை பிரட்றிக் கோட்டை முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1987 ஆம் ஆண்டு கிளிநொச்சி - பூநகரி, 4-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**அன்னக்களி** [குமாரு நகுலேஸ்வரன் -பல்லாய், செம்மண்குன்று, பூநகரி - கிளிநொச்சி]

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய்ப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**ஈசன்** [இராசரத்தினம், பாலசேதீஸ்வரன் - 83, நெடுங்குளம் வீதி, அரியாலை - யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் - மானிப்பாய், நவாலிப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**சிறி / கண்ணாடி** (நவரத்தினசிங்கம் கிருபாகரன் - கிருபாகரன் வீதி, நல்லூர் வடக்கு - யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் எமது பயிற்சி முகாமொன்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த -

**வினோத்** (அல்பிரேட் கிறிஸ்ரிராஜா - புலோப்பளை, பளை - கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் - தென்மராட்சிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சுதர்சன்**

**யோண்சன்**

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி - புளியம்பொக்கணைப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சின்னஜீவகன்** (பழனி ஜெகதீஸ்வரன் - இடதுகரை, முத்தையன்கட்டு - முல்லைத்தீவு)

1992 ஆம் ஆண்டு மன்னார் - நறுவிலிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்திற்கெதிராக மேற்கொள்ளப்படவிருந்த கண்ணிவெடித் தாக்குதலிற்கான ஆயத்த நடவடிக்கைகளின்போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

மன்னார் மாவட்டத் தளபதி -

**லெப். கேணல் வேணு** (பிரான்சிஸ் றொபேட் சேவியர் -ஆண்டாங்குளம், அடம்பன் - மன்னார்)

**மேஜர் குகன்** (இராமலிங்கம் சிவஞானம் - மணற்குளம், புதுக்குடியிருப்பு, உயிலங்குளம் - மன்னார்)

**மேஜர் சயந்தன்** (தங்கராசா ராஜ்மோகன் - உப்புக்குளம் - மன்னார்)

**கப்டன் குட்டிமணி** (அருளானந்தம் றேமன் - கடற்கரை வீதி, பேசாலை - மன்னார்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5707]

## சிந்தனைக்கு

அனுபவம் என்பது அதிகப் பணம் செலவாகும் பள்ளி; ஆயினும் அறிவிலிகள் வேறுபள்ளியில் பயில மாட்டார்கள்.

— பெஞ்சமின் ஃபிராங்க்ளின்.

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 06-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
க. பெ. எண் - 05

## 'செக்'இன் முன்மாதிரி

**1993** ஆம் ஆண்டு நள்ளிரவில் புத்தாண்டு பிறந்த வேளையில் செக்கோசெலவாக்கிய என்ற நாடு சரித்திரத்தில் இருந்து மறைந்து, 'செக்' குடியரசு, 'ஸ்லோவிக்' குடியரசு என இரு நாடுகள் உதயமாகின. ஒரு கோடி 'செக்' மக்களும், 50 லட்சம் ஸ்லோவாக்கிய மக்களும் இரத்தம் சிந்தாமல் தமது பாகத்தினைப் பிரித்துக் கொண்டமை ஓர் அமைதியான விவாகரத்துப் போன்றே இருந்தது.

இதில் 'செக்' மக்களும், அதன் அரசியல் தலைமைத்துவமும் பாராட்டப்பட வேண்டியவை என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. சிறுபான்மை இனமான ஸ்லோவாக்கிய மக்கள் தாம் சுதந்திரமாகப்பிரிந்து செல்ல விரும்பியதை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஸ்லோவாக்கியா பிரிந்து செல்வதைப் பெரும்பான்மையான 'செக்' மக்கள் விரும்பவில்லையாயினும், அதற்காக இரத்தம் சிந்துவதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஸ்லோவாக்கிய மக்கள் தமது இஷ்டத்தின் படியே பிரிந்து செல்ல அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.

ஸ்லோவாக்கிய குடியரசு பிரிந்து சென்றமை குறித்து 'செக்' பத்திரிகை ஒன்று எழுதுகையில், "ஸ்லோவாக்கிய பிரிந்து செல்வதில் (செக் குடியரசு) கொண்டாடுவதற்கு எதுவுமில்லை. ஆனால் அழுவதும் பயனற்றது" எனத் தெரிவித்தது. 'செக்' மக்களின் உணர்வுகளை இப்பத்திரிகை துல்லியமாக வெளிக்காட்டியுள்ளது என்றே தெரிவிக்கப்படுகின்றது.

இத்தனைக்கும் செக்கோசெலவாக்கியாவில் இவ்வளவு விரைவில் ஓர் பிரிவினை வரும், இத்தனைக்கும் 'ஜனநாயகம்' பேசும் மேற்குலகில் கூட எண்ணிப் பார்க்க முடியாத அளவில் கௌரவமான முறையில் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என எவரும் எதிர்பார்க்கவில்லை. அண்டையில் உள்ள முன்னாள் யூக்கோசெலவோக்கியாவில் பெரும்பான்மை சேபியர்கள் சிறுபான்மை இனங்கள் மீது பெரும் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கையில் செக்கோ செலவாக்கியாவில் இவ்வாறான அமைதியான ஓர் விவாகரத்து இடம் பெற்றமை எதிர்ப்பார்க்க முடியாததுதான்.

ஐரோப்பாவில் கம்யூனிச நாடுகளின் சிதை...

# புலிகளுக்கும் அரசுக்கும் மத்தியில் இரகசியப் பேச்சுக்கள் நடக்கிறதா?

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் மத்தியில் அந்தரங்கமான முறையில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக சமீபத்தில் கொழும்பு பத்திரிகைகள் செய்திகளைப் பிரசுரித்தன. இந்த செய்திகளை ஆதாரமாகக் கொண்ட சர்வதேச செய்தி நிறுவனங்களும் ஒலிபரப்பு சேவைகளும் இவ்விவகாரத்தை மேலும் பிரபல்யப்படுத்த முயன்றன.

நீதி அமைச்சர் திரு. ஹமீத் பாரிஸ் நகருக்குச் சென்று, அங்கு விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய பிரதிநிதி திரு. திலகரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியதாகவும், குவேக்கர்ஸ் சமாதான நிறுவனத்தின் மத்தியத்துவத்தின் கீழ் நடைபெறும் இப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் இச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செய்திகளில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது? திரு. ஹமீத் பாரிஸில் திலகரைச் சந்தித்தாரா? இவ்விவகாரத்தில் குவேக்கர்ஸ் சமாதானக் குழுவின் பங்கு என்ன? புலிகளின் சார்பில் சட்டத்தரணி சந்திரயேந்திரா கொழும்பு சென்று பேச்சுக்களை நடத்தினாரா? இது பற்றி ஒரு தெளிவான விளக்கம் தருமாறு எமது நிருபர் விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான பேச்சாளரிடம் கேட்டபோது, "இவையெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட செய்திகள்" என அவர் கூறினார்.

இச் செய்திகள் பற்றி அவர் மேலும் விளக்கம் தருகையில் "குவேக்கர்ஸ் சமாதானக்குழு சமீபத்தில் யாழ்ப்பாணம் விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தியது உண்மை. போர் நிறுத்தம் செய்வதை சிறிலங்கா இராணுவம் விரும்பவில்லை என்றும் அதனால் போர் ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை இரகசியமாக நடத்தலாமென்றும், லண்டனில் அல்லது ஜெனீவாவில் குவேக்கர்ஸின் ஆதரவின் கீழ் அந்தரங்கமாக இருதரப்பும் பேச்சுக்களைத் தொடங்கலாமென்றும் குவேக்கர்ஸ் குழுவினர் எமக்கு யோசனை கூறினார்கள். சிறிலங்கா அரசாங்கம் இரகசியமாக புலிகளுடன் பேச்சுக்களை நடத்த விருப்பம் தெரிவித்திருக்கிறது என்றும், ஆனால் போரை நிறுத்தி சமாதான சூழ்நிலையை உருவாக்குவது சாத்தியமில்லை எனக் கூறியிருப்பதாகவும் குவேக்கர்ஸ் பிரதிநிதிகள் எம்மிடம் கூறினார்கள். சிறிலங்கா அரசின் இந்த நிலைப்பாடு நடைமுறைச் சாத்தியம் அற்றது என எடுத்துக் கூறிய நாம் முதலில் போர் நிறுத்தம் செய்யப்பட்டு, சமாதான சகஜ நிலை உருவாக்கப்பட்டு, அதனையடுத்து பேச்சுக்களை பகிரங்கமாக, அதிகாரபூர்வமான முறையில் நடத்துவதே சரியான அணுகுமுறை என்பதை வலியுறுத்தினோம். "போர் நிறுத்தம் செய்யப்பட்டபின்னர் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் வழிமுறைகள் பற்றியும் பேசவேண்டும் அல்லவா? குடாநாட்டை முற்றுகைக்குள் இறுக்கிப் பிடித்து வைத்திருக்கும் இராணுவத்தினர் எந்தெந்த இடங்களிலிருந்து வாபஸாகி பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்காதபடி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் பேசுவது அவசியமென்றும் நாம் குவேக்கர்ஸ் குழுவிடம் எடுத்துக் கூறினோம்.

ஒட்டு மொத்தத்தில், பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒரு சமாதான சகஜ நிலை தோன்ற வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்தினோம். தமிழீழ மக்களும், போராளிகளும் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கும் வேளையில் அரசியல் பேச்சுக்களை அதுவும் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக நடத்துவதை எமது இயக்கம் விரும்பவில்லை என்பதைச் சுட்டிக் காட்டினோம்," என்றார் அவர். "மீண்டும் கொழும்புக்குத் திரும்பிச் சென்ற குவேக்கர்ஸ் சமாதானக் குழு அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்தியது. ஆனால் எமக்கு உருப்படியான பதில் எதையும் தெரிவிக்காமல் லண்டனுக்குத் திரும்பிச் சென்றுவிட்டது. இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. அதாவது அரசாங்கம் போர் நிறுத்தம் செய்துவிட்டு புலிகளுடன் பேசுவதற்கு விரும்பவில்லை என்பதுதான்" என்றார் புலிகளின் பேச்சாளர்.

பாரிஸில் அமைச்சர் ஹமீத்திற்கும், புலிகளின் பிரமுகர் திலகருக்கும் மத்தியில் நடைபெற்றதாகக் கூறப்படும் இரகசியப் பேச்சுகள் பற்றி அவரிடம் கேட்டபோது "அமைச்சர் ஹமீத் வேறு அலுவலாக ஐரோப்பிய பயணத்தை மேற்கொண்டு லண்டனுக்கு விஜயம் செய்திருக்கிறார். லண்டனிலிருந்து தொலைபேசி மூலம் திலகரை தொடர்பு கொண்டார் என்பது உண்மை. திலகரை தொலைபேசி மூலம் யாரும் தொடர்பு கொள்ள வசதியுண்டு. இதில் எவ்வித முக்கியத்துவமும் இல்லை. பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் போர் நிறுத்தம் செய்து கொள்வது அவசியம் என்பதை திலகர் திரு. ஹமீத்திடம் வலியுறுத்தியிருக்கிறார். போர் நடந்துகொண்டிருக்க புலிகள் பேச்சுக்களை நடாத்தத் தயாரில்லை என்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டையே திலகர் தொலைபேசியிலும் எடுத்து விளக்கியிருக்கிறார். இந்தச் சுருக்கமான தொலைபேசி சம்பாசணையை ஏதோ இரகசியப் பேச்சுவார்த்தை என்பது போல சில பத்திரிகைகள் மிகைப்படுத்த முயன்றிருக்கின்றன இதுதான் உண்மை. இதைத்தவிர வேறு எதுவும் அந்தரங்கமாக நடைபெறவில்லை." என்றார்.

"சென்ற ஆண்டு யுத்தத்தின் விளைவாக புலிகள் இயக்கம் தமிழீழத்தில் ராணுவ மேலாதிக்க நிலையை எய்தியிருக்கிறது. புலிகளின் கை ஓங்கியிருக்கும் இந்தச் சூழ்நிலையில் போர் நிறுத்தம் செய்துபுலிகளுடன் பேசுவதை ஒருபுறம், சிங்கள இராணுவத் தலைமையும், மறுபுறம் அரசாங்கமும் விரும்பவில்லை. இராணுவம்பெருமளவில், என்றுமில்லாதவாறு உயிரிழப்பை சந்தித்து நிற்கும் வேளையில் புலிகளுடன் சமரசம் செய்து கொள்வதால் சிங்களச் சிப்பாய்கள் மேலும் மனவுறுதி தளர்ந்து, அரசு மீது ஆத்திரப்படக் கூடும். இதனால் இராணுவத் தலைமை இப்போது புலிகளுடன் பேச்சுக்களை நடாத்த விரும்பவில்லை. புதிய ஆயுத தளபாடங்களைப் பெற்று ஏதாவது சாதனைகளைப் புரியலாமென ராணுவம் கருதுகிறது போலும். புலிகளைப் பலவீனமான நிலையில் வைத்துப் பேசுவதையே அரசாங்கமும் விரும்புகிறது. இதனால்தான் போர் நிறுத்தத்தை அவர்கள் விரும்பவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார்.

சிறிலங்கா அரசின் தற்போதைய அணுகுமுறை பற்றிக் கேட்டபொழுது "விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க வேண்டும் என்பதோடு புலிகளை அரசியல் ரீதியாக அந்நியப்படுத்தி விட்டு தமிழர் மீது ஏதாவது ஒரு குறைந்தபட்சத் தீர்வை திணிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் பழைய அணுகுமுறையில் எவ்வித மாற்றமும் நிகழ்ந்து விடவில்லை" என்று அவர் பதிலளித்தார்.

"தமிழ் மக்களை ஓரளவிற்காவது திருப்திப்படுத்தும் தீர்வை முன்வைத்தால் அரசியல் ரீதியில் தமிழரிடமிருந்து விடுதலைப் புலிகளை அந்நியப்படுத்தி விடலாம் என பிரேமதாசா அரசாங்கம் தப்புக்கணக்குப் போடுகிறது. ஆனால், ஓரளவு திருப்திப்படும் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவும் பேரினவாத சிங்கள அரசியல் கட்சிகள் தயாராக இல்லை. அதேவேளை, தாமாக முன்வந்து ஒரு தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவும் ஆளும் கட்சிக்கு துணிவு இருப்பதாகத் தெரியவில்லை. இப்படியான முரண்பாடுகளில் சிக்குப்பட்டு பிரேமதாசா அரசு குழம்பி நிற்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானத்தின் கதவை அகலத் திறந்து வைத்து, நல்லெண்ண நேசக் கரத்தை நீட்டி நிற்கிறது. இந்த நல்ல சூழ்நிலையை பயன்படுத்தத் தவறி இராணுவ வெற்றிகளை ஈட்டிக் கொள்ள அரசாங்கம் முனைகிறது. ஆனால் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமாகி, எமது மக்களுக்கு உயிரழிவும், பொருளழிவும் ஏற்படுமாயின் புலிகள் இயக்கம் சமாதானக் கதவுகளை இறுக மூடிவிடும் சூழ்நிலையும் ஏற்படலாம்" என்று அவர் சுட்டிக் காட்டினார்.

# அ.தி.மு.க அரசை கவிழ்த்தால் பொலிசை சந்திக்க தயாரா

## ஆலடி அருணா கேள்வி

(சென்னை)

அ. தி. மு. கவை ஆட்சியை விட்டு கீழே இறக்கினால் ஒரு பொலிஸ்காரரை சந்திக்கும் ஆண்மை கூட அ. தி. மு. கவில் யாருக்காவது உண்டா? ... இராணுவத்தை சந்திப்பார்கள்.

செல்வி ஜெயலலிதா செய்த தியாகம் என்ன எத்தனை ஆண்டுகள் சிறையில் இருந்துள்ளார். எந்த சிறையில் இருந்து ... தொண்டர்களைஅயோத்திக்கு அனுப்பி வைத்தவரும் ஜெயலலிதா தான். இந்நிலையில் மாநில அரசுகளை கலைத்திடும் நடவடிக்கையில் கூட மத்திய அரசு பாரபட்சம் காட்...

## வெளிவிவகார

அதன்படி வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட எம்.பியான ஹட்சன் சமரசிங்க தகவல் துறை இராஜாங்க அமைச்சராகவும், தகவல் துறை இராஜாங்க அமைச்சரான ஏ. ஜே. ரணசிங்க ஜனசவிய திட்டத்திற்கு பொறுப்பாகவும் நியமிக்கப்படவுள்ளார்.

அத்துடது மூன்று முக்கிய ...

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று 7-1-93 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ்மாவட்டகூட்டுறவுச்சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் இருப்பின் முன் கூட்டியே அறியத்தருவதுடன் ...

"ஸ்லோவாக்கியப் பிரிந்து செல்வதில் (செக் குடிய ரசு) கொண்டாடுவதற்கு எதுவுமில்லை. ஆனால் அழுவதும் பயனற்றது" எனத் தெரிவித்தது. 'செக்' மக்களின் உணர்வுகளை இப்பத்திரிகை துல்லியமாக வெளிக்காட்டியுள்ளது என்றே தெரிவிக்கப்படுகின்றது.

இத்தனைக்கும் செக்கோசெலவாக்கியாவில் இவ்வளவு விரைவில் ஓர் பிரிவினை வரும், இத்தனைக்கும் 'ஜனநாயகம்' பேசும் மேற்குலகில் கூட எண்ணிப் பார்க்க முடியாத அளவில் கௌரவமான முறையில் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என எவரும் எதிர்பார்க்கவில்லை. அண்டையில் உள்ள முன்னாள் யூக்கோசெலவோக்கியாவில் பெரும்பான்மை சேபியர்கள் சிறுபான்மை இனங்கள் மீது பெரும் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கையில் செக்கோ செலவாக்கியாவில் இவ்வாறான அமைதியான ஓர் விவாகரத்து இடம் பெற்றமை எதிர்ப்பார்க்க முடியாததுதான்.

ஐரோப்பாவில் கம்யூனிச நாடுகளின் சிதைவின் பின் தேசியவாதம் தலை தூக்கிய போது செக்கோ செலவாக்கியாவிலும் அது வலுப்பெற்றதாயினும், கடந்த யூன் மாதம் நடைபெற்ற தேர்தலின் பின் விரைவாக ஏற்படுத்தப்பட்ட மாற்றம் ஆறு மாத காலத்திற்குள் முடிவிற்கு வந்தது. இதில் ஒன்றே ஒன்றுதான் முக்கியமான அம்சமாக இருந்தது. ஸ்லோவாக்கிய மக்கள் 'செக்'குடன் இணைந்து வாழ விரும்பவில்லை என்பது தான் அது. இதன் பிரகாரம் ஆறுமாத காலத்திற்குள்ளேயே பாகப்பிரிவினையை கச்சிதமாக முடித்துக் கொண்டனர். இதைவிடுத்து 'செக்' அரசியல் தலைவர்கள் விரும்பியிருப்பின் செக்கோ செலவாக்கியாவை இரத்தக்காடாக்கியிருக்க முடியும்.

இவ்விடயத்தில் செக்கோசெலவாக்கியாவின் குறிப்பாக 'செக்'மக்களும் அரசியல்வாதிகளும் நடந்து கொண்ட முறையானது, உலகநாடுகளில் உள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கும், அதன் அரசியல்வாதிகளுக்கும் ஓர் படிப்பினையாகும். ஒரு இன மக்களின் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கான சிறந்த உதாரணமுமாகும். இதனை பல இனங்களைக்கொண்டநாடுகளில் உள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக; சிங்களமக்களும் சிங்கள ஆட்சியாளர்களும் புரிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை ஆரம்பித்து பல தசாப்தங்கள் கடந்துவிட்டன. மாறி மாறி ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஆட்சிபுரிந்துள்ளன. அதிலும், ஆயுதப்போராட்டம் தீவிரமாகி சுமார் 10 வருடத்திற்கு மேலாகியும் ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலிகள் இடம் பெற்ற பின்னரும், சிங்கள ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு ஒன்று காண்பதில் தீவிர அக்கறை காட்டுவதாக இல்லை. இறுதியாக ஒரு வருடத்திற்கு மேலாக நடைபெற்ற பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்கூட சிங்கள ஆட்சியாளர்களால் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கமுடியவில்லை.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காணப்படும் என சிறிலங்கா ஜனாதிபதி அறிவித்திருப்பது நவசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்னா குறிப்பிட்டது போல் வெறும் கேலிக்கூத்து என்றே குறிப்பிடலாம்.

மேலும் விளக்கம் தருகையில் "குவேக்கர்ஸ் சமாதானக்குழு சமீபத்தில் யாழ்ப்பாணம் விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்

...நடந்து வெளிவர வேண்டும் என்பது பற்றியும் பேசுவது அவசியமென்றும் நாம் குவேக்கர்ஸ் குழுவிடம் எடுத்துக் கூறினோம்.

...இல்லை. பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் போர் நிறுத்தம் செய்து கொள்வது அவசியம்

...நிலையில் வைத்துப் பேசுவதையே அரசாங்கமும் விரும்புகிறது. இதனால்தான் போர் நிறுத்தத்தை அவர்கள் விரு

...சூழ்நிலையும் ஏற்படலாம்" என்று அவர் சுட்டிக் காட்டினார்.

# அ.தி.மு.க அரசை கவிழ்த்தால் பொலிசை சந்திக்க தயாரா

## ஆலடி அருணா கேள்வி

(சென்னை)

அ.தி.மு.கவை ஆட்சியை விட்டு கீழே இறக்கினால் ஒரு பொலிஸ்காரரை சந்திக்கும் ஆண்மை கூட அ.தி.மு.கவில் யாருக்காவது உண்டா? கொள்கைக்காக, கட்சிக்காக தியாகம் செய்தவர்கள் சிறை சென்றவர்கள் அ.தி.மு.கவில் எத்தனைபேர் உள்ளனர் என தி.மு.க முக்கியஸ்தர்களில் ஒருவரான ஆலடிஅருணா கேள்வி எழுப்பினார்.

வாணியம்பாடியில் தி.மு.கவின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அ.தி.மு.கவில் விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரைத் தவிர அத்தனை பேரும் சினிமா விசிறிகள். இவர்களா இராணுவத்தை சந்திப்பார்கள்.

செல்வி ஜெயலலிதா செய்த தியாகம் என்ன எத்தனை ஆண்டுகள் சிறையில் இருந்துள்ளார். எந்த சிறையில் இருந்து தியாகம் புரிந்தவர். பொதுக் குழுவினைக் காட்டி மிரட்டினால் காங்கிரஸ் பயந்து விடும் எனவும் ஜெயலலிதா நினைக்கின்றார்.

மேலும் பாபர் மசூதியை காப்பாற்றத் தவறியமைக்காக பாரதீய ஜனதா கலைக்கப்பட்டது. அப்படியானால் பாரதீய ஜனதா செய்த குற்றத்தை ஜெயலலிதா அரசு செய்யவில்லையா தேசிய ஒருமைப்பாட்டு குழுவில் உலகமே அறிய கரசேவையை ஆதரித்தவரும் அதற்காக பொதுக் கூட்டங்களை தமிழகத்தில் நடத்தியவரும், அதற்காக ஆயிரம் தொண்டர்களைஅயோத்திக்கு அனுப்பி வைத்தவரும் ஜெயலலிதா தான். இந்நிலையில் மாநில அரசுகளை கலைத்திடும் நடவடிக்கையில் கூட மத்திய அரசு பாரபட்சம் காட்டியுள்ளது.

இந்நிலையிலும்ஜெயலலிதா அரசு மதவெறியை தூண்டவில்லை. பாரதீய ஜனதாவுக்கு பக்க பலமாக விளங்கவில்லை என மத்திய அரசு எண்ணுகிறதா என கேள்வி தொடுத்தார்.

எனினும் கடந்த ஒரு வாரமாக டில்லியில் இருந்து நிலைமைகளை அவதானித்தபோது மத்திய அரசு ஜெயலலிதாவின் ஆசனத்தை ஆட்ட தயாராகி விட்டதற்கான அறிகுறிகள் தென்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

# அ.தி.மு.க.வை உடைப்பதற்கு நரசிம்மராவ் சதி செய்கிறார்

## அ.தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் சாடல்

(சென்னை)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வை உடைப்பதற்கு திட்டமிட்டு செயல்படுகிறார் இப்படி பிரதமர் துரோகம் இழைத்தால் அ.தி.மு.க.வினர் பிந்தரன்வாலேக்களாகவே மாறுவார்கள் என அ.தி.மு.க.வின் பொதுக்குழுவில் அங்கம் வகிக்கும் எம். எல். ஏயான காந்திராஜன் கூட்டம் ஒன்றில் பேசும் போது தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில் நந்தியால் தொகுதியில் தெலுங்கு தேச உதவியுடன் நரசிம்மராவ் வெற்றி பெற்றதன் பின்னர் தெலுங்குதேச கட்சியை உடைத்தார். அது போல் ஜனதா தள கட்சியை உடைத்து ஒரு பிரிவை தம் கைப்பாவை போல் வைத்துள்ளார் இதுபோன்ற சித்து விளையாட்டை நம்மிடமும் காட்ட முனைகின்றார் இந்நிலையில் காங்கிரஸ் நமக்கு துரோகம் செய்யுமுன் அதனை எதிர்ப்பதற்கு திட்டம் வகுத்தாக வேண்டும் என தெரிவித்தார்.

மேலும் தமிழ்நாட்டில் மட்டும் ஒன்றரைக் கோடி பிந்தரன் வாலேக்க இருக்கிறார்கள் என காங்கிரஸ்கட்சியினருக்கு எச்சரிக்கை விடுத்தார்.

# இந்து-முஸ்லிம்தலைவர்கள் தீர்வுக்கு முனைய வேண்டும்

அயோத்தி பிரச்சினை நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் ஆபத்து இருப்பதால் இந்து - முஸ்லிம் மத தலைவர்கள் பரஸ்பரம் நீதியான பேச்சுகளை நடத்தி ஒரு தீர்வுக்கு வர முனைய வேண்டும் என மத்திய உள்துறை இணையமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பஞ்சாப் பிரச்சினையில் தோல்வி கண்ட பாகிஸ்தான் இன்று அயோத்தி பிரச்சினைகளை பெரிதுபடுத்தி தலைதூக்க முனைகின்றது என்றும் கூறினார்.

இவர் பல முஸ்லிம் மதத் தலைவர்களை சந்தித்து இந்துக்கள் டில்லி ஜும்மாமசூதியை முஸ்லிம்களிடம் ஒப்படைக்குமாறு கூறியதாகவும் தெரிவித்தார்.

இது குறித்து கருத்து தெரிவித்த முஸ்லிம் மத தலைவர்கள் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து ஆர். எஸ். எஸ். இடம் இருந்து வந்துள்ளது என்றும் எனவே இக்கட்சியை தலைதூக்கஅரசு அனுமதிக்கக் கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

வெளிவிவகார அதன்படி வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட எம்.பியான ஹட்சன் சமரசிங்க தகவல் துறை இராஜாங்க அமைச்சராகவும், தகவல் துறை இராஜாங்க அமைச்சரான ஏ. ஜே. ரணசிங்க் ஜனசவிய திட்டத்திற்கு பொறுப்பாகவும் நியமிக்கப்படவுள்ளார்.

அத்துடது மூன்று முக்கிய அமைச்சர்களின் பதவி குறைக்கப்பட இருப்பதுடன் அமைச்சர்கள் சமர்ப்பித்த அறிக்கைகள் ஆராயப்பட்டு வருகிறது.

அத்தோடுதமிழ் ராஜாங்க அமைச்சர் ஒருவர் 'சார்க்' நாடொன்றிற்கு விரைவில் தூதுவராக நியமிக்கப்படலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படைக்குத் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்த போதுஎனது உடலில் நான்கு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் ஏற்பட்டன.

"கடற்படையினரின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக நெல் மூடைகளுக்குள் மறைந்து கொண்டேன். கடற்படையினர் எனது படகு உட்பட மூன்று படகுகளை கட்டிஇழுத்துக்கொண்டு செல்வதை உணர்ந்த நான் கடலில் குதித்தேன். இரத்தம் பீரிட்டு பாய்ந்து ஓடிய போதிலும் ஒருவெளிச்சம் தெரிந்த கரைப் பகுதியை நோக்கி வேதனையின் மத்தியில் ஒருவாறு கழுத்தளவு தண்ணீரில் நீந்திச் சென்றேன்.

"கரையைச் சென்றடைந்ததும் நான்கு பேர் சிங்கள மொழியில் ஏதோ என்னைப் பார்த்து கேட்டனர். பின்னர் அவர்கள் எனது நிலையையும் உணர்ந்துகொண்டனர். அதன் பின்புதான் கடற்படைக்குப் பயந்து பூநகரி இராணுவ முகாமில் சிக்கிக்கொண்டேன் என்பது தெரிந்தது.

"மறுநாள் பலாலி இராணுவ முகாமுக்கு ஹெலிகொப்டர் மூலம் என்னை ஏற்றிச்சென்று அங்குள்ள அதிகாரியிடம் ஒப்படைத்தனர். விசாரணையை மேற்கொண்ட இராணுவ உயர் அதிகாரி அவர்களது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக என்னை அனுமதித்தனர்" என்றார். (யோ)

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று 7-1-93 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ்மாவட்டகூட்டுறவுச்சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் இருப்பின் முன்கூட்டியே அறியத்தருவதுடன் கலந்துரையாடலிலும் தவறாது பங்கு பற்றுமாறு சகல பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர்கள் பொதுமுகாமையாளர்களுக்கு மேற்படி கூட்டுறவுச் சபை அறிவித்தல் விடுத்துள்ளது.

## விதை தானியம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் பொங்கல் தினத்தை யொட்டி சிறுதானியப் பயிர்ச்செய்கைக்கென பயறு, எள்ளு போன்றவற்றை வழங்குவதென்று அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நடைபெற்ற கூட்டத்தில் கமநல உதவி ஆணையாளர் திட்டமிடல் பணிப்பாளர், பிரதிமாவட்ட ஆணையாளர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (42)

## 'விழித்தெழுவோம்'

யில் இடம் பெறவுள்ளது.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வரவேற்புரையை செல்வி தமிழவளும், வெளியீட்டுரையைச் செல்வி மலைமகளும் நிகழ்த்துவர்.

சிறப்புரைகள் செல்வி ஜனனி, கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன், பா. நடேசன் ஆகியோரும், மதிப்புரைகள், திருமதி கோகிலா மகேந்திரன், திருமதி க. சிதம்பரநாதன், திரு. க. சொக்கலிங்கம் ஆகியோரும் நிகழ்த்துவர்.

மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனா கலைஞர்களுக்கு கௌரவமளிப்பார்.

ஈழநாதம்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்

07 - 02 - 1965

வீரச்சாவு

06 - 01 - 1988

### வீரவேங்கை சிறி (கண்ணாடி)
(நவரெத்தினசிங்கம் கிருபாகரன்)

06 - 01 - 1988 இல் மானிப்பாய் நவாலியில் இந்திய படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்தார்.

இவருடைய ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

கிருபாகரன் வீதி, நல்லூர் வடக்கு. - குடும்பத்தினர் [3923]

## 'குமாரி' யாழ். வரும்
(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான உணவு மற்றும் பொருள்களை ஏற்றிவரும் பணியில் மீண்டும் 'குமாரி' கப்பல் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.

ஏற்கனவே புதுவருடத்துடன் 'குமாரி' கப்பலின் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இதற்குப் பதிலாக வேறு ஒரு கப்பல் சேவையில் ஈடுபட உள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அறிவித்திருந்தார். இருந்தும் தற்பொழுது யாழ். குடாநாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்கள் இக்கப்பலில் ஏற்றப்படுவதாக தெரியவருகின்றது.

இக்கப்பல் மிகவிரைவில் பருத்தித்துறையை நோக்கிப் புறப்பட உள்ளதாக மேலும் தெரியவருகின்றது. எனினும் இக்கப்பலில் எடுத்துவரப்படும் உணவுப் பொருள்கள் குடாநாட்டு மக்களின் உணவுத் தேவைக்கு போதுமானவை இல்லை எனவும் தெரியவருகின்றது. (பா)

## மரண அறிவித்தல்கள்

### அப்புத்துரை சிவகுமார் [ராசன்]

சரவணை மேற்கைப்பிறப்பிடமாகக் கொண்டவரும், அரியாலையை வசிப்பிடமாகக் கொண்ட அப்புத்துரை சிவகுமார் அகாலமரணமாகிவிட்டார். இவர் அப்புத்துரை - கனகம்மாவின் அன்பு மகனும் சிவராசா, தனகுமார், யோகாம்பிகை, ஞானாம்பிகை, சிவறஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராசா, விமலாம்பிகை, ஆனந்தியின் அன்பு மைத்துனரும், குமணநாத், மயூரி, அமுதினி, அருண்நாத் ஆகியோரின் அன்பு மாமனும், பிறேமளாவின் அன்புச் சித்தப்பாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று அரியாலை, சந்தோசம் வீதி. இல. 242-ம் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று செம்மணி மயானத்திற்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் அ. தனகுமார் (தாத்தா) (சகோதரன்)

(3934)

### திருமதி பொன்னுத்துரை கோவிலாச்சி

திருமதி பொன்னுத்துரை கோவிலாச்சி காலமானார். அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், கமலாதேவி, நிர்மலாதேவி[கனடா] ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவலிங்கம் (தினேஷ் பாணகம், மானிப்பாய்), குகபாலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பூபதி கனகரத்தினம் (அப்புக்காத்து -கொழும்பு), கோமதீஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை), நாகரட்னம் (இளைப்பாறிய அதிபர், நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுமித்திரா, தினேஷ், கீர்த்தனா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 06-01-93 (இன்று) நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் சி. சிவலிங்கம்

கனகசபை வீதி, மானிப்பாய். (தினேஷ் பாணகம், மானிப்பாய்) [3938]

## 45-ம் நாள் நினைவஞ்சலி

வீர உதயம்: 30 | 12 | 1974



வீரச் சாவு: 24 | 11 | 1992

### 2-ம்லெப்.துரியோதனன் (யசி)
[மகாலிங்கம் ராஜீஸ்வரன்]

ஐபிரு திங்கள் நொந்து அவனியில் பெரும் பேறாக
மெய்யறு மகனுமாகி மேதினி போற்ற ஓங்கி,
வையகத் தமிழர் தம்மை இமைபென காக்க எண்ணி,
துய்யதோர் துரியோதனனாய் நாமமும் சூடிய ஐய!

நாற்பத்தைந்து நாட்கள் நகர்ந்து தான் போனபோதும்,
போற்றுகின்றோம் உன்நினைவை! புகழ்கிறோம் உன் வாழ்வை!
மாற்றார்கள் இம்மண்ணில் வந்துலவ விடமாட்டோமென்றே
ஏற்கிறோம் ஒரு சபதம் உந்தன் பெயராலே.


06-01-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் சகபோராளிகளையும், உற்றார், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் வடக்கு, கோப்பாய். (3982)

உன்பிரிவால் வாடும் அம்மா, அப்பா, சகோதரர்கள். உற்றார், உறவினர்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு: 17 | 11 | 1928



இறப்பு: 07 | 12 | 1992

### அமரர் செல்லையா நாகலிங்கம்
(சாவிக்கார நாகலிங்கம்)

07. 12. 92 இல் காலமான 5ஆம் வாய்க்காலைச் சேர்ந்தவரும் இராசம்மாவின் அன்புக் கணவருமான செல்லையா நாகலிங்கம் (சாவிக்கார நாகலிங்கம்) அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியமும், மதியபோசன உபசாரமும்

## ஓராண்டு நினைவுடன் வீரவணக்கம்

6-1-1992 அன்று மன்னாரில் எதிர்பாராத வெடி விபத்தொன்றில் வீரச்சாவடைந்த மன்னார் மாவட்டத் தளபதி லெப். கேணல் வேணு உட்பட நான்கு வேங்கைகளுக்கும் முதலாமாண்டு நினைவுடன் எங்கள் வீர வணக்கங்கள்,



தமிழீழ

களைப்பெற்றுமூன்றாம்இடத்தையும் பெற்றுள்ளனர்

பாடசாலை ரீதியாக எட்டுப் பாடங்களிலும் சிறப்பு திறன் [விசேட சித்தி] பெற்றோர்எண்ணிக்கை வருமாறு

கொக்குவில் இந்துக் கல்லூரி 02, இந்து மகளிர் கல்லூரி - 02, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - 2, சம்பத்திரிசியார் கல்லூரி - 01, பரியோவான் கல்லூரி - 1, வேம்படி மகளிர் கல்லூரி - 01, ஹாட்லிக் கல்லூரி - 01, உடுவில் மகளிர் கல்லூரி -01, சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 01, தெல்லிப்பழை மகாஜன கல்லூரி - 01.

யாழ் இந்துக் கல்லூரியில் ஏழு சிறப்புத்திறன், ஒரு திறமைச் சித்தி - 9 பேர், ஏழு சிறப்புதிறன், ஒரு சித்தி - 2 பேர், வேம்படி மகளிர் கல்லூரி ஏழு சிறப்புத் திறன் ஒரு திறமைச் சித்தி -5 பேர். மன்னார் மாவட்டத்தில் அல்லைப்பிட்டி

6-1-1992 அன்று மன்னாரில் எதிர்பாராத வெடி விபத்தொன்றில் வீரச்சாவடைந்த மன்னார் மாவட்டத் தளபதி லெப். கேணல் வேணு உட்பட நான்கு வேங்கைகளுக்கும் முதலாமாண்டு நினைவுடன் எங்கள் வீர வணக்கங்கள்,



**லெப். கேணல்**
**வேணு**
(பிரான்சிஸ் றொபேட்சேவியர்)
ஆண்டாங்குளம், அடம்பன்



மேஜர்
**சயந்தன்**
தங்கராசா ராஜ்மோகன்
உடபுக்குளம், மன்னார்



மேஜர்
**குகன்**
இராமலிங்கம் சிவஞானம்
உயிலங்குளம், மன்னார்



கப்டன்
**குட்டிமணி**
அருளானந்தம் றேமன்
பேசாலை, மன்னார்

விடுதலை, விடுதலை என்று முழங்கிய
வேங்கை மறவர்களே — நீங்கள்
விட்ட விடுதலைப் போரைத் தொடர்கிறோம்
விடியலைத் தேடுகிறோம்.

**- மன்னார் மக்கள்**

(சி-5711)

---

...பாடங்களிலும் சிறப்பு திறன் [விசேட சித்தி] பெற்றோரெண்ணிக்கை வருமாறு கொக்குவில் இந்துக் கல்லூரி 02, இந்து மகளிர் கல்லூரி - 02, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - 2, சம்பத்திரிசியார் கல்லூரி - 01, பரியோவான் கல்லூரி - 1, வேம்படி மகளிர் கல்லூரி - 01, ஹாட்லிக் கல்லூரி - 01, உடுவில் மகளிர் கல்லூரி -01, சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 01, தெல்லிப்பழை மகாஜன கல்லூரி - 01.

யாழ் இந்துக் கல்லூரியில் ஏழு சிறப்புத்திறன், ஒரு திறமைச் சித்தி - 9 பேர், ஏழு சிறப்புதிறன், ஒரு சித்தி - 2 பேர், வேம்படி மகளிர் கல்லூரி ஏழு சிறப்புத்திறன் ஒரு திறமைச் சித்தி -5 பேர். மன்னார் மாவட்டத்தில் அடிப்புறோமன் கத்தோலிக்க பாடசாலை ஆறு சிறப்புதிறன், இரண்டு திறமைச் சித்தி ஒருவர்; கிளிநொச்சி மாவட்டம் கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆறு சிறப்புத்திறன் இரண்டு திறமைச்சித்தி ஒருவர். வவுனியா மாவட்டம் கனகராயன் மகாவித்தியாலயம் ஆறு சிறப்புத்திறன், ஒரு திறமைச்சித்தி ஒரு சித்தி ஒருவர். ஒமந்தை மகாவித்தியாலயம் ஐந்து சிறப்புத்திறன் மூன்று திறமைச் சித்தி ஒருவர். முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் ஐந்து சிறப்பு திறன் மூன்று திறமைச்சித்தி ஒருவர் இதே வேளை இப்பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளியின் அடிப்படையில் கோட்டத்திற்கு தலா ஐந்து பேரிற்கும் தேசிய அளவில பத்துப்பேரிற்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

---

**படை**

எதிர்பார்க்கப்படுகிறது. தரைப்படைக்கு நவீன ஆயுதங்களும் வழங்கப்படவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

---

**சூடாநாட்டில்**

யும், சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் பற்றியும், விழிப்பாக இருக்குமாறும் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்,

---

## வாகன இலக்கங்கள்

நேற்று வவுனியா தாண்டிக்குளம் சோதனைச் சாவடிகள் ஊடாக வாகனங்கள் அனுமதிக்கப்பட்டன ஆயினும் தவிர்க்க முடியாத காரணங்களினால் வாகன இலக்கங்களை பிரசுரிக்கமுடியவில்லை. அவ் இலக்கங்கள் நாளை பிரசுரிக்கப்படும்.

---

பிறப்பு: 17-11-1923



இறப்பு: 07-12-1992

## அமரர் செல்லையா நாகலிங்கம்
(சாவிக்கார நாகலிங்கம்)

07. 12. 92 இல் காலமான 5ஆம் வாய்க்காலைச் சேர்ந்தவரும் இராசம்மாவின் அன்புக் கணவருமான செல்லையா நாகலிங்கம் (சாவிக்கார நாகலிங்கம்) அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியமும், மதியபோசன உபசாரமும் 06-01-93 இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

08-12-92 அன்று அன்னாரின் சமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்து, பலவித உதவிகளை புரிந்தவர்களுக்கும் எம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- மனைவி, மக்கள், மருமக்கள்

(சி-5704

---

## 45-ம் நாள் நினைவு தினம்



**வீரவேங்கை சக்தி**
(சுந்தரலிங்கம் சுதர்சினி)

| வீரப்பிறப்பு: | வீரஇறப்பு: |
| --- | --- |
| 31- 03- 1973 | 23- 11- 1992 |

23. 11. 92இல் பலாலி வளலாயில் காவல் அரண் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்தார்.

உன் பிரிவால் வாடும்

மண்டான், கரணவாய் மேற்கு, கரவெட்டி.

அப்பா, அம்மா, சகோதரர்கள்.

(3926)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டுஜனவரி மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.